## மெட்ரோ ரயில் நிலையங்களில் தொடங்கியுள்ள

# ஷேர் ஆட்டோ, டாக்ஸிகளில் 28,831 பேர் பயணம்

**சென்னை**

மெட்ரோ ரயில் நிலையங்களில் தொடங்கியுள்ள ஷேர் ஆட்டோ மற்றும் ஷேர் டாக்ஸி சேவை மக்களிடம் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது. இதுவரையில் 28,831 பேர் பயணம் செய்துள்ளனர்.

இது தொடர்பாக மெட்ரோ ரயில் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

மெட்ரோ ரயில்களில் மக்கள் அதிக அளவில் பயணம் செய்யும் வகையில் பல்வேறு முக்கிய பகுதிகளை இணைத்து கடந்த ஆகஸ்ட் 11-ல் மெட்ரோரயில்நிலையங்களில் இருந்து ஷேர் ஆட்டோ மற்றும் ஷேர் டாக்ஸி வசதி தொடங்கப்பட்டது.

**ரூ.10, 15 கட்டணத்தில் சுமார் 3 கி.மீ பயணம் செய்யும் வகையில் இந்த சேவை தொடங்கப்பட்டது. இது மக்களிடம் வரவேற்பை பெற்றுள்ளது.**

ரூ.10, 15 என குறைந்த கட்டணத்தில் சுமார் 3 கி.மீ. பயணம் செய்யும் வகையில் இந்த சேவை தொடங்கப்பட்டது. மக்களிடம் இத்திட்டம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இதுவரையில் ஷேர் ஆட்டோ மற்றும் டாக்ஸிகளில் மொத்தம் 28,831 பேர் பயணம் செய்துள்ளனர். அதிகபட்சமாக கிண்டி மெட்ரோ ரயில் நிலையத்தில் 6,499 பேரும், ஆலந்தூரில் 4,380 பேரும் ஷேர் ஆட்டோவை பயன்படுத்தியுள்ளனர். இதேபோல், டிஎம்எஸ்-ல் 1,398 பேரும் ஆலந்தூரில் 1,263 பேரும் ஷேர் டாக்ஸியை பயன்படுத்தியுள்ளனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.